# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 388/2023
# வழக்கு சாட்சி PW–13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சஞ்சய்காந்தி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகவேல் | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆலங்குளம் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் புளியரை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 18.07.2022 ம் தேதி, 20.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, செங்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று விசாரித்தபோது, சிகிச்சைக்கு வந்த சுடலைமுத்து என்ற அருள்ராஜ் என்பவர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு சென்றதாக கிடைத்த தகவலின் படி, 21.45 மணிக்கு தென்காசி அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சுடலைமுத்து என்ற அருள்ராஜ் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, 23.30 மணிக்கு காவல்நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.157/2022, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன்

அசலை செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.25 18:31:50 +0530